1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அதற்கான ஆணைகள் வழங்குவதற்கு அரசு ஏற்பாட்டைச் செய்யும். சில நிர்வாகக் காரணங்கள் காரணமாகத்தான் அவர் மீண்டும் பழைய கல்லூரியிலேயே பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று அறக்கட்டளைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். இப்போது ஒப்புதல் வந்துவிட்டதாகச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். எனவே இது குறித்து ஆணைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

96—

தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியை நிர்ணயித்தல்.

***16445—திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியை நிர்ணயிக்கக் கோரி அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெருமளவில் வறுமைக் கோட்டின் கீழே இருக்கிறவர்களும், அரிசன மக்களும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஊர் பெரிதாக இருந்தால் கூலி குறைவாகக் கொடுக்கிறார்கள். காலனிகாரர்கள் அதிகமாக அந்தப் பகுதியில் இருந்தால் தினக்கூலி உயர்வாகக் கிடைக்கிறது. நகரத்தின் பக்கத்திலே இருப்பவர்களுக்கு ஒருவிதமாகத் தினக் கூலி கிடைக்கிறது.

[*1994 நவம்பர் 10*

கிராமங்களில் இருந்து வருபவர்களுக்கு ஒருவிதமாகக் கூலி கிடைக்கிறது. ஆகவே தமிழகத்தின் விவசாயத் தொழிலாளர்களுக்கு சீரான தினக்கூலியை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா? இந்த விவசாய தினக் கூலியை எந்தத் துறை நிர்ணயிக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–55*

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து குறைந்தபட்ச ஊதியமாக ரூபாய் 20 முதல் அதிகபட்சமாக ரூபாய் 38 வரை வழங்கப்படுகிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி அளிப்பது வருவாய்த் துறையால் அமல்படுத்தப்படுகிறது.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத காலங்களில், அவர்களுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது; கைத்தறி நெசவாளர்கள் தொழில் செய்ய முடியாத மழைக் காலங்களில் அவர்களுக்கு அரசு ஊக்கத்தொகை வழங்குகிறது; அதே போல, தமிழகத்திலே விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத காலங்களில் அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கும், அந்த விவசாயிகள் அகால மரணம் அடைந்துவிட்டால் அவர்களுக்கு இன்சூரன்ஸ் பாலிஸி வழங்கும் திட்டத்தின் கீழே நிதி வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வருவாய்த்துறை சம்பந்தப்பட்டது. எனவே, தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, டாக்டர் வெ. சரோஜா இருக்கையில் இல்லை.

வினா எண் 98, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.